AS INTRODUCED IN LOK SABHA

**Bill No. 80 of 2023**

# THE FOREST (CONSERVATION) AMENDMENT BILL, 2023

A

BILL

*further to amend the Forest (Conservation) Act,* 1980.

BE it enacted by Parliament in the Seventy-fourth Year of the Republic of India as follows:—

Short title and commencement.

**1.** (*1*) This Act may be called the Forest (Conservation) Amendment Act, 2023.

(*2*) It shall come into force on such date as the Central Government may, by notification in the Official Gazette, appoint.

Insertion of Preamble.

69 of 1980.

**2.** In the Forest (Conservation) Act, 1980 (hereinafter referred to as the principal Act), after the long title and before the enacting formula, the following preamble shall be inserted, namely:—

"WHEREAS, the importance of forests is to be realised to enable achievement of national targets of Net Zero Emission by 2070 and maintain or enhance the forest carbon stocks through ecologically balanced sustainable development;

AND WHEREAS, Nationality Determined Contribution targets of the country envisage creating carbon sink of additional 2.5 to 3.0 billion tons of $CO_2$ equivalent by 2030;

AND WHEREAS, the country envisages an increase in the forest and tree cover to one-third of its land area, which is to be given impetus with an enhanced growth trajectory;

AND WHEREAS, India has a rich tradition of preserving forests and their bio-diversity, and, therefore, enhancing forest based economic, social and environmental benefits, including improvement of livelihoods for forest dependent communities is envisaged;

AND WHEREAS, it is necessary to provide for provisions relating to conservation management and restoration of forests, maintaining ecological security, sustaining cultural and traditional values of forests and facilitating economic needs and carbon neutrality.".

Amendment of section 1.

**3.** In section 1 of the principal Act, in sub-section (*1*), for the words and brackets "Forest (Conservation) Act", the words and brackets "*Van (Sanrakshan Evam Samvardhan) Adhiniyam*" shall be substituted.

Insertion of new section 1A.

**4.** After section 1 of the principal Act, the following section shall be inserted, namely:—

Act to cover certain land.

'1A. (*1*) The following land shall be covered under the provisions of this Act, namely:—

(*a*) the land that has been declared or notified as a forest in accordance with the provisions of the Indian Forest Act, 1927 or under any other law for the time being in force; 16 of 1927.

(*b*) the land that is not covered under clause (*a*), but has been recorded in Government record as forest, as on or after the 25th October, 1980:

Provided that the provisions of this clause shall not apply to such land, which has been changed from forest use to use for non-forest purpose on or before the 12th December, 1996 in pursuance of an order, issued by any authority authorised by a State Government or an Union territory Administration in that behalf:

*Explanation.*—For the purposes of this sub-section, the expression "Government record" means record held by Revenue Department or Forest Department of the State Government or Union territory Administration, or any authority, local body, community or council recognised by the State Government or Union territory Administration.

(*2*) The following categories of land shall not be covered under the provisions of this Act, namely:—

(*a*) such forest land situated alongside a rail line or a public road maintained by the Government, which provides access to a habitation, or to a rail, and roadside amenity up to a maximum size of 0.10 hectare in each case;

(*b*) such tree, tree plantation or reafforestation raised on lands that are not specified in clause (*a*) or clause (*b*) of sub-section (*1*); and

(*c*) such forest land,—

(*i*) as is situated within a distance of one hundred kilometres along international borders or Line of Control or Line of Actual Control, as the case may be, proposed to be used for construction of strategic linear project of national importance and concerning national security; or

(*ii*) up to ten hectares, proposed to be used for construction of security related infrastructure; or

(*iii*) as is proposed to be used for construction of defence related project or a camp for paramilitary forces or public utility projects, as may be specified by the Central Government, the extent of which does not exceed five hectares in a Left Wing Extremism affected area as may be notified by the Central Government.

(*3*) The exemption provided under sub-section (*2*) shall be subject to such terms and conditions, including the conditions of planting trees to compensate felling of trees undertaken on the lands, as the Central Government may, by guidelines, specify.'.

Amendment of section 2.

**5.** In the principal Act, section 2 shall be renumbered as sub-section (*1*) thereof and—

(*a*) in sub-section (*1*) as so renumbered,—

(*I*) in clause (*iii*), for the words "not owned, managed or controlled by Government", the words ", subject to such terms and conditions, as the Central Government may, by order, specify"shall be substituted;

(*II*) in the *Explanation,* for the long line occurring after clause (*b*), the following shall be substituted, namely:—

"but does not include any work relating to or ancillary to conservation, development and management of forests and wildlife, such as—

(*i*) silvicultural operations including regeneration operations;

(*ii*) establishment of check-posts and infrastructure for the front line forest staff;

(*iii*) establishment and maintenance of fire lines;

(*iv*) wireless communications;

(*v*) construction of fencing, boundary marks or pillars, bridges and culverts, check dams, waterholes, trenches and pipelines;

53 of 1972.

(*vi*) establishment of zoo and safaris referred to in the Wild Life (Protection) Act, 1972, owned by the Government or any authority, in forest areas other than protected areas;

(*vii*) eco-tourism facilities included in the Forest Working Plan or Wildlife Management Plan or Tiger Conservation Plan or Working Scheme of that area; and

(*viii*) any other like purposes, which the Central Government may, by order, specify.";

(*b*) after sub-section (*1*) as so renumbered, the following sub-section shall be inserted, namely:—

"(*2*) The Central Government may, by order, specify the terms and conditions subject to which any survey, such as, reconnaissance, prospecting, investigation or exploration including seismic survey, shall not be treated as non-forest purpose.".

Insertion of new section 3C.

**6.** In the principal Act, after section 3B, the following section shall be inserted, namely:—

Power of Central Government to issue directions.

"3C. The Central Government may, from time to time, issue such directions, to any authority under the Central Government, State Government or Union territory Administration, or to any organisation, entity or body recognised by the Central Government, State Government or Union territory Administration, as may be necessary for the implementation of this Act.".

## STATEMENT OF OBJECTS AND REASONS

The Forest (Conservation) Act, 1980 (the Act) was enacted to provide for the conservation of forests and for matters connected therewith or ancillary or incidental thereto. It provides that prior permission of the Central Government is required for de-reservation of forest land, use of forest land for non-forest purposes, assigning of forest land by way of lease to private entities and for clearing of naturally grown trees for the purpose of reafforestation.

2. After its enactment, new challenges relating to ecological, social and environmental developments, such as, mitigating the impact of climate change, achieving the national targets of Net Zero Emission by 2070 and maintaining or enhancing the forest carbon stock have emerged at national and international levels. Further, keeping in view the aims and objective of the country to increase the forest or tree cover for creation of carbon sink of additional 2.5 to 3.0 billion tons of $CO_2$ equivalent by 2030, and to carry forward the rich tradition of preserving forests and their bio-diversity symbiotically by enhancing forest based economic, social and environmental benefits, including improvement of livelihoods for forest dependent communities, it is necessary to broaden the horizons of the Act.

3. Further, prior to the Judgment of the Hon'ble Supreme Court, dated the 12th December, 1996 (in the matter of *T.N. Godavarman Thirumulpad vs. Union of India and others)*, the provisions of the said Act were applied to notified forest lands and not to revenue forest areas, and non-forestry use in the revenue forest areas was allowed through permissions granted by the Government and various authorities. Subsequent to the said Judgment, the provisions of the Act were applied in the recorded forest areas including such recorded forests which had already been put to various type of non-forestry use, thereby restraining the authorities from undertaking any change in the land use and allowing any development or utility related work. Besides this, apprehensions prevailed regarding applicability of the Act in the plantations raised in private and Government non-forest lands. This situation resulted in misinterpretation of the provisions of the Act with respect to their applicability especially in recorded forest lands, private forest lands, plantations, etc. Therefore, it is considered necessary to prescribe the extent of applicability and non-applicability of the Act in various types of lands.

4. There is also a need to fast track the strategic and security related projects of national importance so as to ensure development of vital security infrastructures, especially along the international border areas such as Line of Actual Control, Line of Control and Left Wing Extremism affected areas. Similarly, small establishments, habitations on the side of public roads and railways also need to be facilitated by providing them access and connectivity to main arterial roads and other public utilities.

5. Since, there is change in the ecological, social and environmental regimes and policies relating to conservation and development of forests during the last four decades since the enactment of the Act, to keep its provisions in tandem with the dynamic changes in the ecological, strategic and economic aspirations of country, it is proposed to introduce the Forest (Conservation) Amendment Bill, 2023 in Parliament. The salient features of the said Bill, *inter alia,* are to—

(*i*) insert a preamble to the Act to encompass the country's rich tradition of preserving forests, their bio-diversity and tackling climate change challenges within its ambit;

(*ii*) amend the short title of the Act to be called the *Van* (*Sanrakshan Evam Samvardhan*) *Adhiniyam,* 1980, so as to ensure that the potential of its provisions is reflected in its short title;

(*iii*) clarify the scope of applicability of the Act upon various lands so as to remove ambiguities and bring clarity;

(*iv*) exempt certain categories of lands from the purview of the Act—

(*a*) to fast track strategic and security related projects of national importance;

(*b*) to provide access to small establishments, habitations on the side of public roads and railways; and

(*c*) to encourage plantation on non-forest land;

(*v*) provide for terms and conditions including the condition of planting trees to compensate felling of trees undertaken on the lands while considering the proposed relaxations under the Act;

(*vi*) include more activities, which are taken up for the cause of conservation of forest and wild life in to the array of forestry activities;

(*vii*) bring uniformity in the applicability of the provisions of the Act in respect of both Government and private entities;

(*viii*) empower the Central Government to specify, by order, the terms and conditions subject to which any survey, such as, reconnaissance, prospecting, investigation or exploration including seismic survey, shall not be treated as non-forest purpose;

(*ix*) empower of the Central Government to issue directions.

6. The Bill seeks to achieve the above objectives.

NEW DELHI;
*The* 27*th March*, 2023.

BHUPENDER YADAV.

*ANNEXURE*

EXTRACTS FROM THE FOREST (CONSERVATION) ACT, 1980

(69 OF 1980)

*  *  *  *  *

Short title, extent and commencement.

**1.** (*1*) This Act may be called the Forest (Conservation) Act, 1980.

*  *  *  *  *

Restriction on the dereservation of forests or use of forest land for non-forest purpose.

**2.** Notwithstanding anything contained in any other law for the time being in force in a State, no State Government or other authority shall make, except with the prior approval of the Central Government, any order directing—

*  *  *  *  *

(*iii*) that any forest land or any portion thereof may be assigned by way of lease or otherwise to any private person or to any authority, corporation, agency or any other organisation not owned, managed or controlled by Government;

*  *  *  *  *

*Explanation.*—For the purposes of this section "non-forest purpose" means the breaking up or clearing of any forest land or portion thereof for—

(*a*) the cultivation of tea, coffee, spices, rubber, palms, oil-bearing plants, horticultural crops or medicinal plants;

(*b*) any purpose other than reafforestation,

but does not include any work relating or ancillary to conservation, development and management of forests and wildlife, namely, the establishment of check-posts, fire lines, wireless communications and construction of fencing, bridges and culverts, dams waterholes, trench marks, boundary marks, pipelines or other like purposes.

*  *  *  *  *

LOK SABHA

A

BILL

further to amend the Forest (Conservation) Act, 1980.

(*Shri Bhupender Yadav, Minister of Environment, Forest and Climate Change and Labour and Employment*)

MGIPMRND—2857LS(S3)—27.03.2023.

**<u>மக்களவையில் தாக்கல் செய்தபடி</u>**

**<u>மசோதா எண். 80/2023</u>**

# வன (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா 2023

வன (பாதுகாப்பு) சட்டம் 1980 இல் மேலும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான ஒரு மசோதா

இந்தியா தனது நாடாளுமன்றத்தில், மக்களாட்சியின் எழுபத்தி நான்காம் ஆண்டு பின்வருமாறு சட்டம் இயற்றும்:-

| | | |
|---|---|---|
| 69/1980 | (1) இந்த சட்டம் வன (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா 2023என்று அழைக்கப்படும்<br>(2) மத்திய அரசு, அதிகாரபூர்வமான அரசிதழில் ஒரு அறிவிப்பு மூலம் பின்வருமாறு நியமனம் செய்கையில் அந்த குறிப்பிட்ட தேதியில் இது அமலுக்கு வரும், அதாவது:-<br>"ஆதலால், தேசத்தின் குறியிலக்கான கார்பன் வெளிப்பாடு அறவே இல்லாத நிலையை 2070ஆம் ஆண்டுக்குள் எட்டிவிட உதவுவதற்கு வனங்களின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு நீடித்து நிலைக்கக் கூடிய வகையில் வளர்ச்சியடைய சூழ்நிலை சமநிலைப்படுத்துவதன் மூலமாக வனப்பகுதியின் கரிம வளத்தின் இருப்பை பராமரிக்க அல்லது மேம்படுத்தவேண்டும்;<br>மற்றும் ஆதலால், நாட்டினத்தால் உறுதி செய்யப்பட்ட பங்களிப்போடான நாட்டின் குறியிலக்குகள், 2030 ஆம் ஆண்டுக்குள் 2.5 இல் இருந்து 3 பில்லியனுக்கு சமமான $CO_2$இருப்பை கூடுதலாக உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது<br>மற்றும் ஆதலால், நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை வனப் பகுதிகளாகவும் மற்றும் மரங்களின் அடர்த்தியையும் கூடுதலாகவும் உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது, அதற்காகவென்றே ஒரு மேம்பட்ட வளர்ச்சிக்கான உந்துதல் அளிக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது;<br>மற்றும், ஆதலால், வனங்கள் மற்றும் அதன் பல்லுயிரினங்களை பாதுகாப்பதில் இந்தியாவுக்கு ஒரு நீண்ட வலுவான பாரம்பரியம் உள்ளது ஆகவே, வன வள | ஒரு சிறிய தலைப்பு மற்றும் தொடக்கம்<br><br>முன்னுரை உள்ளிடப்படவேண்டும் |

| | | |
|---|---|---|
| | அடிப்படையிலான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பலன்களை, வன வளத்தின் மீது சார்ந்திருக்கக் கூடிய சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது உட்பட வழங்கப்படவேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டுள்ளது;<br>மற்றும் ஆதலால், வனப் பாதுகாப்பு மேலாண்மை மற்றும் மீட்டெடுத்தல், சுற்றுச்சூழல் சார்ந்த பாதுகாப்பை பராமரித்தல், வனங்களின் கலாச்சார மற்றும் பாரம்பரிய மதிப்பீடுகளை மற்றும் பொருளாதார தேவைகள் மற்றும் கரிம சமநிலையை நீடித்து நிலைக்கச்செய்வது தொடர்பானவற்றுக்கான வழிமுறைகள் மற்றும் வசதிகளை வழங்குவது முக்கியமான ஒன்றாகும் | |
| விதிப்பிரிவு 1 இன் திருத்தம் | 3.. முதன்மைச்சட்டப்பிரிவு 1 துணைப்பிரிவு (1) இல் மற்றும் அடைப்புக் குறிகளில் . காணப்படும் வார்த்தைகள் “வன (பாதுகாப்பு) சட்டம், வன (சன்ரக்ஷன் இவம் சம்வர்தான்) அதினியம் என்ற வார்த்தைகள் மற்றும் அடைப்புக் குறிகள் மாற்றியமைக்கப்படும். | |
| புதிய விதிப்பிரிவு 1 A இன் உள்ளீடு | 4. முதன்மைச் சட்டப்பிரிவு 1 க்கு அடுத்ததாக பின்வரும் பிரிவுகள் உள்ளிட்டப்படும் அதாவது, | 16/1927 |
| சில நிலப்பகுதிகளை உள்ளிடக்குவதற்கான சட்டம் | 1 A (1) பின்வரும் நிலப்பகுதிகள் இந்தச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளவைகளில் அடங்கும் அதாவது:-<br>(a)இந்திய வனச்சட்டம் 1927 அல்லது தற்சமயம் நடைமுறையிலுள்ள எந்த ஒரு சட்டத்தின் கீழும் வழங்கப்பட்டுள்ள படி வனம் என்று அறிவிக்கப்பட்ட அல்லது பிரகடனப்படுத்தப்பட்ட எந்த ஒரு நிலப்பகுதியும்.<br>(b)உட்பிரிவு (a) இல் உள்ளடங்காத ஆனால் 1980, அக்டோபர் 25 அல்லது அதற்குப் | |

| | | |
|---|---|---|
| | பிறகு அரசு ஆவணங்களில் வனம் என்று பதிவு செய்யப்பட்ட எந்த ஒரு நிலப்பகுதியும்<br>இருப்பினும், 1996 டிசம்பர் 12 ஆம் தேதி அல்லது அதற்கு முன்பாக ஒரு நிலப்பகுதி தொடர்பாக மாநில அரசால் அதிகாரமாளிக்கப்பட்ட ஒரு அதிகாரி அல்லது மத்திய அரசு ஆட்சிக்குட்பட்ட பகுதியின் நிர்வாகம் ஒரு உத்திரவின் மூலம் வனப்பகுதி பயன்பாட்டைத் தவிர்த்து வேறு வனப்பகுதி அல்லாத நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டுவரும் அம்மாதிரியான நிலப்பகுதிகளுக்கு இந்த சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளவைகள் பொருந்தாது<br>விளக்கம்: இந்த துணை விதிப்பிரிவின் நோக்கங்களுக்காக , "அரசுப் பதிவேடு ஆவணங்கள் என்பது மாநில அரசு அல்லது மத்திய அரசின் ஆட்சிக்குட்பட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ளவருவாய்த் துறை அல்லது வனத்துறை அல்லது எந்த ஒரு உள்ளூர் அதிகாரி உள்ளூர் நிர்வாக அமைப்பு அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட சமூகம் அல்லது மன்றத்தின் பொறுப்பிலுள்ள ஆவணங்கள் என்று பொருள்படும்.<br>(2) பின்வரும் நிலப்பிரிவு வகைகள் இந்த சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளவைகளின் கீழ் அடங்காது, அவையாவன:<br>(a)வாழ்க்கை நடைமுறைகளுக்கு அல்லது ஒரு ரயில் வண்டிக்கு அணுகல் வசதியை வழங்கக்கூடிய மற்றும் சாலையோர வசதிகளை வழங்கக்கூடிய ரயில்வே இருப்புப் பாதை அல்லது அரசால் பராமரிக்கப்பட்டுவரும் பொதுச் சாலைகளை ஒட்டி அமைந்துள்ள அவை ஒவ்வொன்றும் அதிகபட்சமாக 0.10 ஹெக்டேர் பரப்பளவுக்கு மிகாத அம்மாதிரியான வன நிலப்பகுதிகள்,;<br>(b) துணைவிதிப்பிரிவு (1) இன் விதிப்பிரிவு (a) அல்லது விதிப்பிரிவு (b) இல் குறிப்பிட்டு சொல்லப்படாத அம்மாதிரியான மரம், மரத்தோப்புக்கள் அல்லது மீள் காடு வளர்த்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலப் பகுதிகள் மற்றும்; | 45 |

| | | |
|---|---|---|
| | (c.) பின்வரும் அம்மாதிரியான நிலப்பகுதிகள்:- | |
| | i. பன்னாட்டு எல்லை அல்லது எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு, அல்லது உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகில் அதன் படி, அதை ஒட்டி நூறு கிலோமீட்டர் தூரத்தில் தேச முக்கியத்துவம் கருதி தேசத்தின் பாதுகாப்பின் அடிப்படையில் யுக்திபூர்வமாக அமைக்கப்படவேண்டி முன்மொழியப்பட்ட செயல்திட்டத்தின் கீழ் வரும் எந்த ஒரு நிலப்பகுதியும்; அல்லது | |
| | ii) பாதுகாப்புத் தொடர்பான உள்கட்டமைப்புகளின் கட்டுமானத்திற்காக பயன்படுத்த முன்மொழியப்பட்ட அம்மாதிரியான பத்து ஹெக்டேர் வரையிலான நிலப்பகுதி; அல்லது | |
| | iii) இராணுவம் தொடர்பான கட்டுமானப் பணித் திட்டங்களுக்காக அல்லது துணை இராணுவப் படையினர் தங்க அல்லது பொதுமக்கள் பயன்பாட்டுக்கான செயல்திட்டங்களுக்காக பயன்படுத்த மத்திய அரசால் முன்மொழியப்பட்ட, ஐந்து ஹெக்டேர் க்கும் மிகாத இடது சாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மத்திய அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்ட அம்மாதிரியான நிலப்பகுதி | |
| | (3) இந்த துணை விதிப்பிரிவு (2) இன் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிவிலக்கு வெட்டப்படும் மரங்களுக்கு ஈடாக மரங்கள் நடப்படும் நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் அம்மாதிரியான அம்மாதிரியான நிலங்களுக்கு மத்திய அரசு வழிகாட்டுதல்களின் மூலம் குறிப்பிடப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்கும் | |
| சட்டப்பிரிவு 2 திருத்தம் | 5. முதன்மைச் சட்டத்தின் பிரிவு 2 க்கு துணைப் பிரிவு (1) என்ற புதிய எண் வழங்கப்படும் மற்றும் –<br>(a)அவ்வாறு புதிய (1) வழங்கப்பட்ட எண் இன் துணைப் பிரிவில்<br>(I) விதிப்பிரிவு (iii) இல் “ அரசின் உடைமை உரிமை இல்லாத, மேலாண்மை | |

| | | |
|---|---|---|
| 53/1972 | செய்யப்படாத அல்லது கட்டுப்பாட்டில் இல்லாத “ என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக “ மத்திய அரசு ஒரு உத்திரவின் கீழ் குறிப்பிடும் அம்மாதிரியான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு என்ற வார்த்தைகள் சேர்க்கப்படும்.<br>(ii)*விளக்கக் குறிப்பில்* விதிப்பிரிவு (b) க்குப் பிறகு அமைந்திருக்கும் நீண்ட வாக்கியம் பின்வரும் சொற்களால் மாற்றியமைக்கப்படும், அதாவது:-<br>“ ஆனால் வனம் மற்றும் வன உயிரினங்களின் பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மேலாண்மை தொடர்பான அல்லது அதற்கு இணையான கீழே குறிப்பிட்ட வகையில் எந்த ஒரு வேலையையும் அது உள்ளடக்காது –<br>(i) மீள் உருவாக செயல்பாடுகள் உட்பட, மரவளர்ப்புச் செயல்பாடுகள்;<br>(ii) முதல் நிலை வன பணியாளர்களுக்கான சோதனைச் சாவடி மற்றும் உள்கட்டமைப்புக்கலாய் நிறுவுதல்<br>(iii) தீ விபத்து பாதுகாப்பு வரிசை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்,<br>(iv) கம்பியில்லா / வான்விழி தொடர்புகள்<br>(v) வேலிகள் அமைப்பது, எல்லை குறிப்பது மற்றும் தூண்கள், பாலங்கள் மற்றும் மதகுகள், தடுப்பு அணைகள், நீர் குட்டைகள், குழிகள், மற்றும் குழாய்கள் அமைப்பது;<br>(vi) வன உயிர் (பாதுகாப்பு) சட்டம் 1972, இல் வழங்கப்பட்டதற்கிணங்க, பாதுகாக்கப்பட்ட பகுதிகளைத் தவிர வேறு எந்த வனப் பகுதிகளிலும் அரசு அல்லது எந்த ஒரு அதிகார மையத்தால் அமைக்கப்படும் விலங்கியல் பூங்கா அல்லது கான் விலங்குப் பூங்கா<br>(vii) வன செயல்திட்டம் அல்லது வன உயிர் மேலாண்மை திட்டம் அல்லது புலிகள் பாதுகாப்புத் திட்டம் அல்லது அந்தப் பகுதியின் எந்த ஒரு செயல்திட்டங்களிலும் உள்ளடங்கிய சுற்றுச்சூழல் சுற்றுலா வசதிகள்; மற்றும் | |

| | | |
|---|---|---|
| புதிய பிரி சட்டப்பிரிவு 3C உள்ளீடு வழிகாட்டுதல் களைஅளிக்க மத்திய அரசுக்கான அதிகாரம் | (viii) மத்திய அரசால் ஒரு உத்திரவின் பேரில் அறிவிக்கப்படும் அதே போன்ற நோக்கங்களுக்கான எந்த ஒரு திட்டமும்<br>(b). அவ்வாறு எண் மாற்றப்பட்ட விதித் துணைப்பிரிவு (1) க்குப் பின் கீழ் கண்ட துணைப் பிரிவுகள் உள்ளிட்டப்படும் அதாவது:-<br>“ (2) மத்திய அரசு ஒரு உத்திரவின் கீழ் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வரையறுத்துக் குறிப்பிடும், கணக்கெடுப்பு அதனடிப்படையில், ஒப்புகை உளவை மதிப்பீடு, புலன் ஆய்வு, புவி நடுக்க ஆய்வு உட்பட பிற ஆய்வு அல்லது புத்தாய்வுகள் வனம் தவிர்த்த நோக்கங்கள் என்று கருதப்படாது .<br>6. முதன்மைச் சட்டத்தில், பிரிவு 3B க்கு பிறகு பின்வரும் விதிப்பிரிவுகள் இணைக்கப்படும், அவையாவன:-<br>“3C மத்திய அரசு, மாநில அரசு அல்லது மத்திய அரசின் நிர்வாக எல்லைக்குட்பட்ட எந்த ஒரு அதிகாரமையத்திற்கும் அல்லது மத்திய அரசு, மாநில அரசு அல்லது மத்திய அரசின் எல்லைக்குட்பட்ட நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு நிறுவனத்திற்கும் அமைப்புக்கும் அல்லது நிர்வாகத்துக்கும் இந்த சட்டத்தை அமல்படுத்துவதற்குத் தேவையான அம்மாதிரியான வழிகாட்டுதல்களை மத்திய அரசு அவ்வப்போது அளிக்கும் | |

<u>குறிக்கோள்கள் மற்றும் காரணங்கள் குறித்த அறிக்கை</u>

வன (பாதுகாப்பு) சட்டம் 1980 (சட்டம்) வன வளத்தை அதன் தொடர்புடைய விஷயங்களை அல்லது அதோடு இணைந்தவற்றை அல்லது அதன் விளைவாக உருவாவனவற்றை பாதுகாக்க வழங்கல்களுக்கு ஏற்பாடு செய்வதை உறுதி செய்ய நிறைவேற்றப்பட்டது. வனப் பகுதிகளை ஒதுக்கீட்டு நோக்கத்துக்கு வெளியே பயன்படுத்த, வனநோக்கங்கள் தவிர்த்த காரியங்களுக்கு பயன்படுத்த, தனியார் நிறுவனங்களுக்கு வன நிலப் பகுதிகளை குத்தகைக்கு ஒதுக்கீடு செய்ய மற்றும் மரம் நடுவதற்காக ஏற்கனவே இயற்கையாக வளர்ந்த மரங்களை அகற்றுவதற்காக மத்திய அரசின் முன் அனுமதி பெறப்படவேண்டும் என்பதை இது வலியுறுத்துகிறது.

2.. இந்தச்சட்டம் நிறைவேற்றிய பிறகு, பருவ நிலை மாற்றத்தின் தாக்கத்தை குறைப்பது, 2070ஆம் ஆண்டுக்குள் தேசத்தின் குறியிலக்கான கார்பன் வெளிப்பாடு அறவே இல்லாத நிலையை எட்டிவிடும் நோக்கத்தை நிறைவேற்றுவது அல்லது வனநிலப்பரப்பில் கரிம இருப்பை தேசீய மற்றும் பன்னாட்டு அளவீடுகளுக்கு மேம்படுத்துவது உட்பட , புவியியல் சூழல் சார்ந்த, சமூக மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாடு தொடர்பாக புதிய சவால்கள் தோன்றின. மேலும், 2030 ஆம் ஆண்டுக்குள் 2.5 இல் இருந்து 3 பில்லியனுக்கு சமமான $CO_2$இருப்பை கூடுதலாக உருவாக்கும் நாட்டின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு நாட்டின் நிலப்பரப்பை காடுகள் மற்றும் மரங்களால் அடர்த்தியாகச் செய்தல் , மற்றும் வனங்கள் மற்றும் அதன் பல்லுயிரினங்களை பாதுகாப்பதில் இந்தியாவுக்கு உள்ள ஒரு நீண்ட வலுவான பாரம்பரியத்தை மேலே எடுத்துச்செல்ல , வன வள அடிப்படையிலான பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பலன்களை, வன வளத்தின் மீது சார்ந்திருக்கக் கூடிய சமூகத்தினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது உட்பட வழங்கப்படுவதை உறுதி செய்ய இந்த சட்டத்தின் எல்லைகளை விரிவுபடுத்தவேண்டியது மிகவும் அவசியம்.

3.மேலும், டி.என். கோதவர்மன் திருமுல்பாட் //எதிர்// இந்திய ஒன்றியம் மற்றும்மற்றவர்கள் வழக்கில் டிசம்பர் 12, 1996 தேதியிட்ட மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முன்னதாக,

அந்தச் சட்டத்தின் விதிகள் குறிப்பிட்டு அறிவிக்கப்பட்ட வனப்பகுதி நிலங்களுக்கு பொருந்துமாறு செய்யப்பட்டனவே தவிர அவை வருவாய் வனப் பகுதிகளுக்கு அனுமதிக்கப்பட்வில்லை மற்றும் வருவாய் வனப் பகுதிகளில் வனப் பயன்பாடு அல்லாத

செயல்பாடுகள் அரசு மற்றும் பல்வேறு அதிகாரமையங்களிடமிருந்து அனுமதி பெற்றுவதன் மூலம் அனுமதிக்கப்பட்டது.
அந்தக் குறிப்பிட்ட தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட பல்வேறு வகையான வனப் பயன்பாடு அல்லாதவற்றுக்கு பயன்படுத்தப்பட்ட அம்மாதிரியான காடுகள் உட்பட பதிவு செய்யப்பட்ட வனப் பகுதிகளில் சட்ட விதிகள் செயல்படுத்தப்பட்டன, அதன் மூலம் அதிகாரிகள் அந்த நிலங்களின் பயன்பாட்டில் எந்த ஒரு மாற்றத்தையும் மேற்கொள்ளாமலும் மற்றும் எந்த ஒரு வளர்ச்சி அல்லது பயன்பாடு தொடர்பான பணிகளுக்கும் அனுமதி தருவதை கட்டுப்படுத்தவும் முடிந்தது. இதைத்தவிர, வனம் அல்லாத நிலங்களில் தனியார் மற்றும் அரசு உருவாக்கிய தோட்டங்களுக்கு இந்த சட்டத்தின் பொருந்தும் தன்மை குறித்த அச்ச உணர்வு இருந்தது. குறிப்பாக பதிவு செய்யப்பட்ட வன நிலங்கள், தனியார் வன நிலங்கள், தோட்டங்கள் போன்றவற்றை பொறுத்தவரையில் இந்த சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளவைகளை தவறாக பொருள் கொண்டதால் இந்த சூழ்நிலை உருவானது. ஆகவே பல்வேறு நில அமைப்புக்களைப் பொறுத்த வரையில் இந்தச் சட்டத்தின் விதிகள் எந்த அளவு பொருந்தும் அல்லது பொருந்தாது என்பதை வரையறுப்பது அவசியம் என்று கருதப்படுகிறது.
4. முக்கியமான பாதுகாப்புதொடர்பான உள்கட்டமைப்பு மேம்பாட்டை உறுதி செய்ய, குறிப்பாகசர்வதேச எல்லைப் பகுதிகளில் உண்மையான எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு, எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு மற்றும் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் யுக்திபூர்வமான மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை விரைவாக நிறைவேற்றி முடிக்க வேண்டிய கட்டாய தேவையும் உள்ளது சாலையோரமாக மற்றும் ரயில் பாதையை ஒட்டி அருகாமையில் அமைந்துள்ள சிறிய நிறுவனங்கள், குடியிருப்புக்கள் ஆகியவற்றுக்கும் முக்கிய போக்குவரத்து வசதிகள் மற்றும் இதர பொதுபயன்பாட்டு அமைப்புக்களை இணைத்து அணுகும் வசதிகளை வழங்க வேண்டிய தேவை இருக்கிறது.
5. சூழியல், சமூக மற்றும் சுற்றுச்சூழல் நிலைகளில் மாற்றம் மற்றும் கடந்த நாற்பது ஆண்டுகளாக வனப் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பான கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதால், இந்தச் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து அதன் வழங்கல்களை நாட்டின் சூழியல் மற்றும் யுக்திபூர்வமான மற்றும் பொருளாதாரம் சார்ந்த எதிர்பார்ப்புக்களின் ஆற்றல் மிக்க மாற்றங்களுக்கு இணையாக

பொருத்தமாக வைத்திருக்க வன (பாதுகாப்பு) திருத்த மசோதா, 2023 நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய முன்மொழியப்பட்டுள்ளது.

மற்றவற்றுக்கிடையே அந்த குறிப்பிட்ட மசோதாவின் முக்கிய அம்சங்கள்:-

(i) இந்தச் சட்டத்தின் வரம்புக்குள்,வனப்பாதுகாப்பு , அவற்றின் பல்லுயிரினத் தன்மையை பாதுகாப்பது மற்றும் பருவ கால நிலை மாற்றங்களினால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வது போன்றவற்றை உள்ளடக்கிய நாட்டின் வளமான பாரம்பரியத்தை விளக்கும் முன்னுரையை உள்ளிடப்படும்

(ii) சட்டத்தின் தலைப்பு அதன் வழங்கல்களில் உள்ளடங்கிய சாத்தியக் கூறுகளை பிரதிபலிப்பதை உறுதி செய்யும் வகையில் சுருக்கமாக ,"" வன (சன்ரக்ஷன் இவம் சம்வர்தான்) அதினியம்" , 1980, என்று மாற்றியமைக்கப்பட்டு அழைக்கப்படும்

(iii) இந்தச் சட்டத்தின் வீச்சளவு பல்வேறு நிலப்பகுதிகளுக்கும் பொருந்தக்கூடிய அளவில் அமைந்திருப்பதை தெளிவுபடுத்தி பொருள் குழப்பத்தை நீக்கி அதன் வழங்கல்களை தெளிவாக வெளிப்படச்செய்யவேண்டும்.

(iv) சட்டத்தின் நோக்கெள்ளையிலிருந்து சில வகையான நிலப்பகுதிகளுக்கு விலக்கு அளிக்கவேண்டும்-

(a) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த யுக்திபூர்வமான மற்றும் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை விரைந்து செயல்படுத்த ;

(b) பொதுச் சாலைகள் மற்றும் ரயில் பாதைகள் நெடுக அதை ஒட்டி அமைந்துள்ள உள்ள சிறிய நிறுவனங்கள், குடியிருப்பு பகுதிகளுக்கு அணுகலை வழங்குதல்; மற்றும்

(c) வனப்பகுதி அல்லாத நிலங்களில் தோட்டங்களை உருவாக்க ஊக்குவிப்பது;

(v) இந்த சட்டத்தின் கீழ் வழங்கப்பட முன்மொழியப்பட்ட விதிவிலக்கை கருத்தில் கொள்ளும் போது , அம்மாதிரியான நிலங்களில் வெட்டப்பட்ட மரங்களுக்கு ஈடு செய்யும் வகையில் புதிய மரங்களை நடுவதற்கான நிபந்தனைகள் உட்பட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வகுத்துரைக்க வேண்டும்

(vi) வனவியல் சார்ந்த தொடர் நடவடிக்கைகளின் போது வனம் மற்றும் வன உயிரின பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் கூடுதல் செயல்பாடுகளையும் இது உள்ளடக்கியது;

(vii) சட்டத்தின் விதிகளை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு சீராக பொருந்தக்கூடிய வகையில் வகுத்தமைத்தல்.

(viii) நில அதிர்வு மதிப்பீட்டு நடவடிக்கைகள் உட்பட்ட எந்த உளவை மதிப்பீடு, ஒப்புகை, புலன் ஆய்வு, சோதனை அல்லது ஆய்வுகள் மேற்கொள்ளுதல் போன்றவை வனமற்ற நோக்கத்திற்கான செயல்பாடுகளாக கருதப்படாது என்பதற்கு உட்பட்டு ஒரு உத்தரவின் மூலம் , விதிமுறைகள் மற்றும்நிபந்தனைகளை குறிப்பிடத்தகுந்த வகையில் வழங்க மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்தல்,

(ix) வழிகாட்டுதல்களை வழங்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளித்தல் .

6. இந்த மசோதா மேற்குறிப்பிட்ட குறிக்கோள்களை எட்டி அடையும் நோக்கத்தைக் கொண்டுள்ளது

புது தில்லி; பூபேந்தர் யாதவ்

(டிஸ்கிளைமர்: மேலே உள்ள வன (பாதுகாப்பு) சட்டத் திருத்த மசோதா , 2023 , ஆங்கில நகலில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டதாகும் . ஏதேனும் ஐயம் இருப்பின் மசோதாவின் ஆங்கில நகலை மக்களவை வலைத்தளத்தில் பார்க்கவும் , அதுவே இறுதியானது)

## இணைப்பு

## வன (பாதுகாப்பு) சட்டம் 1980 இல் இருந்து எடுக்கப்பட பகுதிகள்

69/1980

| | |
|---|---|
| சிறிய தலைப்பு மற்றும் அதன் வீச்சாளவு மற்றும் தொடக்கம் | 1.. (1) இந்தச் சட்டம் வன (பாதுகாப்பு) சட்டம் 1980 என்று அழைக்கப்படலாம் |
| வனப் பகுதிகளின் ஒதுக்கீடு நீக்கம் செய்யப்படுவதை அல்லது வனப் பகுதி நிலங்களை வனம் அற்ற பகுதிகளாக பயன்படுத்தும் நோக்கத்தை கட்டுப்படுத்துதல் | 2. ஒரு மாநிலத்தில் தற்சமயம் நடைமுறையிலுள்ள எந்த ஒரு இதர சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவைகள் எந்த ஒன்றையும் பொருட்படுத்தாமல், மத்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெறாமல் எந்த ஒரு மாநில அரசு அல்லது எந்த ஒரு அதிகார மையமும் பின்வரும் வழிகாட்டு உத்திரவை மீறி செயல்படக் கூடாது<br>(iii) எந்த ஒரு தனிநபர் அல்லது எந்த ஒரு அதிகார மையம், மாநகராட்சி, முகைமை அல்லது அரசு உரிமை உடைமை இல்லாத, அரசு மேலாண்மை அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத எந்த நிறுவனத்திற்கும் எந்த ஒரு வனப்பகுதி நிலமும் அல்லது அதன் எந்த ஒரு பாகமும் குத்தகை அல்லது வேறு எந்த ஒரு வகையிலும் ஒதுக்கீடு செய்யக்கூடாது.<br>*விளக்கம்*<br>இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக “வனம் அல்லாத பயன்பாடு” என்பதன் பொருள் விளக்கமானது, பின் வரும் காரியங்களுக்காக எந்த ஒரு வனப் பகுதி நிலத்தையும் அல்லது அதன் எந்த ஒரு பங்கையும் தோண்டுதல் அல்லது அப்புறப்படுத்தி சுத்திகரித்தல்<br>(a) தேயிலை, காபி, மசாலா, ரப்பர், பனை, எண்ணை வித்து தாவரங்கள், தோட்டக்கலை தொடர்பான அல்லது மருந்து சம்பந்தப்பட்ட பயிர்களை பயிரிடுவதற்காக<br>(b) காடுவளர்த்தல் நடவடிக்கை தவிர்த்த எந்த ஒரு நோக்கத்திற்காகவும்<br>ஆனால்,சோதனைச் சாவடிகள், தீ விபத்து பாதுகாப்பு வரிசைகள், வான் வெளித் தொடர்பு சாதனங்கள் மற்றும் வேலிகள், பாலங்கள், தடுப்புக்கள்,அணைகள், நீர் குட்டைகள், பதுங்கு குழி அடையாளங்கள், எல்லை அடையாளங்கள், குழாய் வழிப் பாதைகள், அல்லது இது போன்ற பிற நோக்கங்கள் போன்ற வனப் பகுதி மற்றும் பல்லுயிரின பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மேலாண்மை தொடர்பான அல்லது அதன் இணையான எந்த ஒரு பணி நடவடிக்கைகளும் இதில் அடங்காது. |

மக்களவை

வன (பாதுகாப்பு) சட்டம் 1980 இல் மேலும் திருத்தங்கள் மேற்கொள்வதற்கான

ஒரு மசோதா

(மாண்புமிகு திரு பூபேந்தர் யாதவ்,அமைச்சர்,சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் மற்றும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு)